நோட்டி.·.பிகேஷன், 6 (1) நோட்டிஃபிகேஷன் அடிப்படையிலே சொத்துக் களை பற்றி நோட்டிஃபிகேஷன் வெளியிடுகிறார்கள். தடை ஏதாவது இருக்கு மானால் அரசாங்கத்திற்குச் சொல்லித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறோம். இவைகளின் மீது நாம் முடிவெடுக்கும்போது நிலச் சொந்தக்காரர்கள் வழக்குமன்றம் செல்கிறார்கள். நாம் பல முறை களை வைத்திருக்கிறோம். அந்த முறைகளைப் பரிசீலனை செய்கிறோம். அவர்கள் கொடுக்க மறுத்தால், சமாதானம் கூறவோ, விளக்கம் கூறவோ தாசில்தார், அரிசன நல இலாகாவிற்காக ஸ்பெஷல் தாசில்தார் (லாண்ட் அக்விசிஷன்) தலையிடுகிறார். அவர் நேரடியாக சமாதானம் சொல்லி, நிலைமையைப் பரிசீலனை செய்து செயலில் ஈடுபடுகிறார். இத்தனையையும் மீறித்தான் அவர்கள் வழக்கு மன்றம் செல்ல முடிகிறது. வழக்கு மன்றம் செல்வதைத் தடுக்க முடியாது. வழக்குகளை விரைவிலே பரிசீலித்துத் தீர்ப்பு கூறவேண்டுமென்றுதான் இன்றைக்கு அரசாங்கத்தின் வழக்கறிஞர்களைக் கொண்டு அடிக்கடி வற்புறுத்தி வருகின்றோம். எனவே இந்த வழக்குகளின்மீது விரைவிலே தீர்ப்புக் கூறி முடிவெடுப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது.

Regional Medical College at Tiruchirappalli.

***479 *Q.*—Thiru K. VINAYAKAM, Thiru V. SWAMINATHAN, and Thiru K. CHEEMAICHAMY :** Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

(*a*) whether there is a proposal to locate Regional Medical College in Tiruchirappalli.

(*b*) if so, when would the proposal be implemented ; and

(*c*) the number of students proposed to be admitted in the first year ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) அண்டு (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு கே. விநாயகம் : ரீஜனல் மெடிகல் காலேஜ்களை பெரும்பாலும் சென்டிரல் கவர்ன்மெண்டுதான் ஆரம்பித்திருக்கிறது. அதுமாதிரி சென்டிரல் கவர்ன்மெண்டு ஏதாவது யோசனை தெரிவித்ததா ? அதற்கு ஏதாவது இடையூறுகள் இருக்கின்றனவா ? திருச்சியில் இடம் கிடைக்க வில்லை, போதிய அளவுக்கு வசதி இல்லை என்று நமது சர்க்கார் எடுத்துரைத்திருக்கிறதா ? இது தாமதப்படுவதற்குக் காரணம் என்ன? சென்டிரல் கவர்ன்மெண்டு காரணமா ? அவர்கள் கேட்டு, நாம் உதவி தராமல் அது தாமதப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ரீஜனல் மெடிகல் காலேஜஸ் ஐந்து துவக்க வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் திட்டங்களில் ஒன்று. நமது அரசாங்கத்தின் சார்பில் நாமும் மூன்று மருத்துவக் கல்லூரிகளைத் துவக்க வேண்டும் என்ற செயற் குறிப்பும் இருக்கிறது. டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்வீசஸ் சிபார்சு செய்தவை, கோவை, தர்மபுரி, அருப்புக்கோட்டை என்ற மூன்று இடங்கள். அரசாங்கம் சிபார்சு செய்த இடங்கள் கோவை, திருச்சி, சேலம். இந்த மூன்று இடங்களில் கோவையில் ஏற்கனவே, பி.எஸ்.ஜி. சாரிடீஸ் டிரஸ்ட் ஆஃப் கோயம்பத்தூர், திருவாளர் குப்புசாமி நாயுடு சாரிடீஸ் டிரஸ்டு, கோவை ஆகிய இருவர்களும் ரூ. 25 லட்சம் நன்கொடையாகத் தந்து, ஒரு புதிய கல்லூரி ஆரம்பிப்பதற்கு உதவி செய்கிறோம் என்று அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தார்கள். அதை மத்திய அரசுக்கு நமது மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது. ஆனாலும், இன்னும் அதற்குரிய பதில் வரவில்லை.

1969 மார்ச் 26]

திருச்சியில் இப்பொழுது 400 படுக்கைகள் கொண்ட அரசாங்க மருத்துவ மனை ஒன்று இருப்பதன் காரணமாக, அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று நினைத்து, மத்திய சர்க்காருக்கு திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வகை இருக்கிறது என்று எழுதியிருக்கிறோம். ஆனால், மத்திய சர்க்காரிடமிருந்து அதற்கும் இதுவரையில் எந்த விதமான பதிலும் வரவில்லை. பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது, சேலததில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்போவதாக. ஆனால், அதிகாரபூர்வமாக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மாநில அரசுக்கு எதுவும் வரவில்லை. திருச்சியில் கூட தனியார்கள் திரு எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி செட்டியார், மானேஜிங் டிரஸ்டி, உருமு சேஷாசலம் செட்டியார் சாரிடீஸ் ரூ. 5 லட்சம் நன்கொடை கொடுத்து, 40 எக்கர் நிலமும் நன்கொடையாக, இனமாகக் கொடுத்து, ஒரு மருத்துவக் கல்லூரி திருச்சியில் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். பொது மக்கள் ரூ. 15 லட்சம் அளவுக்கு நன்கொடையாக வசூல் செய்து தருவதாக உறுதி கூறியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் வைத்து அரசாங்கம் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. மாநில அரசின் சார்பில் திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கலாமா என்பதையெல்லாம் பற்றிப் பரிசீலனை நடக்கிறது.

Sanitary Inspector's Course.

*480 *Q.*—THIRU N. S. V. CHITHAN ; **Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the number of seats available in different Medical Colleges for the Sanitary Inspector's Course in this State ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :—

மருத்துவக் கல்லூரியின் பெயர். (1)	இடங்களின் எண்ணிக்கை. (2)
1. சென்னை மருத்துவக் கல்லூரி	50
2. ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி	100
3. மதுரை மருத்துவக் கல்லூரி	100
4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி	50
5. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி	50
மொத்தம் ..	350

திரு. என். எஸ். வி. சித்தன் : இவற்றை உயர்த்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவைகளை உயர்த்துவதாக இல்லை. இது தவிர, காந்தி கிராம் ரூரல் இன்ஸ்டிட்யூட்டில் 30 இடங்கள் இருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் டிரெயினிங் கோர்ஸுக்கு டிபார்ட்மெண்டல் காண்டிடேட்ஸ் ஒரு சிலர் வருகிறார்கள். அவர்களுக்கு டிரெயினிங் ஆனதும் வேலை கிடைத்துவிடுகிறது. சானிடரி இன்ஸ்பெக்டர்ஸ் கோர்ஸுக்கு டிரெயினிஸாக டைரக்ட் ரெக்ரூட்மெண்டு செய்யப்படுபவர்களுக்குப் பெரும்பாலும் வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறது, அதைப்பற்றி ஏதாவது அரசாங்கத்திற்குத்